සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**Provincial Department of Education - NWP**
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**48 T I**

පළමු වාර පරීක්ෂණය - 10 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 10 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2018

**சுட்டிலக்கம் .........................................** **தமிழ் இலக்கிய நயம் I** **நேரம் : 3 மணித்தியாலம்**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

## பகுதி I

01. 1 - 5 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

1. "புத்தகசாலை" என்ற கவிதையை இயற்றியவர் யார்?
   இவரது படைப்புக்கள் இரண்டு தருக.

2. "பத்தி எழுத்து" என்றால் என்ன?
   "பத்தி எழுத்துக்கள்" கட்டுரையை எழுதியவர் யார்?

3. "குருவே! கடைசியாக எங்களுக்கு ஏதாவது அறிவுரை கூறுங்கள்."
   அ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
   ஆ. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

4. வாய்மொழிப் பாடல்களின் வகைகள் இரண்டு தருக.

5. அமுதம் போல் செந்தமிழிற் கவிதை நூல்கள் இப்பாடலில் வெளிப்படும் அணி யாது?
   விளக்குக.

(4x5=20 புள்ளிகள்)

02. கீழே தரப்பட்டுள்ள பாடற்பகுதியை வாசித்துத் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு உரைநடையில் விடை எழுதுக.

நாலைந்து வீதிகளுக் கொன்று வீதம்
நல்லதுவாய் வசதியாய் இல்லம் வேண்டும்
நூலெல்லாம் முறையாக ஆங்கமைத்து
நொடிக்குநொடி ஆசிரியர் உதவுகின்ற
கோலமுறும் செய்தித்தாள் அனைத்தும் ஆங்கே
குவிந்திருக்க வகைசெய்து தருதல் வேண்டும்
மூலையிலோர் சிறுநூலும் புதுநூலாயின்
முடிதனிலே சுமந்துவந்து தருதல் வேண்டும்

வாசிக்க வருபவரின் வருகையை ஏற்றும்
மரியாதை காட்டி அவர்க் கிருக்கை தந்தும்,
ஆசித்த நூல்தந்தும் புதிய நூல்கள்
அழைத்திருந்தால் அதையுரைத்தும், நாளும் நூலை
நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்
நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
மா சற்றதொண் டிழைப்பீர்! சமுதாயச் சீர்
மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வீர்.

1. வாசிகசாலைகள் எவ்விதம் பெருக்கமாக காணப்பட வேண்டுமென ஆசிரியர் ஆசைப்படுகிறார்?
2. வாசிகசாலையிலே எவைகள் நிறைந்து காணப்பட வேண்டுமெனக் குறிப்பிடுகின்றார்?
3. புதுநூல்கள் வாசிகசாலைக்கு இன்றியமையாதன என்பதை ஆசிரியர் எவ்விதமாக வலியுறுத்துகின்றார்?
4. வாசகர்கள் வாசிகசாலையை நோக்கிப் பெருகுவதற்கு எமது செயற்பாடு எவ்விதம் அமைய வேண்டும் எனக் காட்டப்பட்டுள்ளது?
5. தூய்மையான தொண்டினை எவ்விதமாக செய்ய உழைக்க வேண்டும் எனவும், இதனால் கிடைக்கும் உயர்வு யாது எனவும் ஆசிரியர் எவ்விதம் வலியுறுத்துகிறார்?

(5x5=25 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

03. கீழ்க்காணும் உரைப்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அவன் குழந்தைப்பருவத்தில் தொட்டிலாகி, நடைபழகும் பருவத்தில் நடை வண்டியாகி, பள்ளிப் பருவத்தில் ஏடுகளாகி, மணப்பருவத்தில் கட்டிலாகி, கிழப்பருவத்தில் ஊன்றுகோலாக, இறந்த பிறகும் பாடையாகி, சிதையிலும் உடன்கட்டை ஏறி அவன் சாம்பலோடு சாம்பலாகிக் கலந்து மனிதனுக்காகவே தங்களை முற்றிலும் அர்ப்பணம் செய்யும் மரங்கள்.

மனிதனின் தாகத்திற்குப் பானம் தந்து பசிக்கு உணவூட்டி, உடுத்த உடையாக, வசிக்க வீடாகி, நோய்க்கு மருந்தாகி, அவன் பயணத்திற்கு சக்கரங்களாகி, அவன் வேலைகளில் கைகளுக்குள் கைகளாகி, அவன் சுவாசத்திற்காக காற்றைச் சலித்து கொடுத்து, அவனுக்காக மேகங்களைக் கெஞ்சி பிச்சை கேட்டு ஓ! மரங்கள் மட்டும் இல்லையென்றால் மனிதன் வாழ்ந்திருப்பானா?

1. மனிதனின் வாழ்க்கைப் பாதையில் மரங்கள் எவ்வாறு இரண்டறக் கலக்கின்றன?
2. மரம் மனிதனுக்கு செய்த உதவிகள் யாவை?
3. அவனுக்காக மேகங்களைக் கெஞ்சிப் பிச்சை கேட்டு.... இதில் கையாளப்பட்டுள்ள அணி யாது?
4. அவன் சுவாசத்திற்காக காற்றைச் சலித்துக் கொடுத்து என்ற அடியினை சுருக்கமாக விளக்குக.
5. கீழ்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்து தருக.
   அ. மரம் ஆ. நோய் இ. உணவு ஈ. காற்று
   ஊ. மேகம்

(5x5=25 புள்ளிகள்)

## பகுதி III

04. மருத்துவிச்சி வாழ்த்துப்பாடலில் மருத்துவிச்சியின் மனப்பாங்குகளை எடுத்துக் கூறுக.

05. புத்தகசாலை என்ற கவிதையிலிருந்து,

அ. கவிஞரின் தமிழ்ப்பற்று வெளிப்படும் விதம்

ஆ. நூலகம் ஒன்றின் அமைப்பு பற்றி கவிஞர் விபரிக்கும் விதம் என்பவற்றை விளக்குக.

06. அ. பத்தி எழுத்துக்கள் என்ற பகுதியில் மரம் என்பது உயர்திணை என்பதற்கு கவிஞர் முன்வைக்கும் ஆதாரங்களைத் தொகுத்து கூறுக

ஆ. மென்மையே வாழும் என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக் கூறுக.

(15x2=30 புள்ளிகள்)

* * *



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

முதலாம் தவணைப்பரீட்சை - 2018
தமிழ் இலக்கிய நயம்
தரம் 10
விடைகள் - பகுதி I

01. 1. பாரதிதாசன் - போர் மறவன், பாண்டியன் பரிசு

2. பத்தி எழுத்துக்கள் என்றால் ஏதேனும் ஒரு விடயம் பற்றி பத்திரிகைகள் சஞ்சிகைகளில் எழுதப்படுகின்ற கருத்துரைகள் ஆகும்.
கவிக்கோ அப்துல் ரஹ்மான்

3. அ. சீடரால் கன்.ஃபூஷியசுக்கு
ஆ. கன்.ஃபூஷியஸ் மரணப் படுக்கையில் இருந்த சந்தர்ப்பத்தில்

4. மருத்துவிச்சிப்பாடல், தாலாட்டுப்பாடல், மீனவப்பாடல்

5. உவமையணி
உவமானம் - அமுதம்
உவமேயம் - தூய தமிழ் கவிதை நூற்கள்
பொதுத்தன்மை - இனிமை

02. 1.
- வாசிக்க வரும் வாசகர்களை வரவேற்று மரியாதை செலுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
- வாசிக்கவரும் வாசகர்களை ஆசனத்தில் இருக்கச் செய்தல் வேண்டும்.
- வாசகர்கள் விரும்பிய புத்தகங்களை கொடுத்தும் புதிய நூல்கள் வந்திருப்பின் அதைப்பற்றி வாசகர்களுக்கு கூறக்கூடியதுமாக இருக்க வேண்டும்.
- விதம் விதமாக பத்திரிகைகள் குவிந்து நிறைந்து இருக்க வேண்டும்.

2. உடனுக்குடன் உதவும் விதம் விதமான பத்திரிகைகள் அங்கே குவிந்து நிறைந்து இருக்க வேண்டும்.

3. ஒரு பக்கத்தில் சிறிய புத்தகமும் புதிய நூலாயின் தலையிலே எடுத்து வந்து வாசிக்கத் தருதல் வேண்டும்.

4.
- வாசிக்க வரும் வாசகர்களை வரவேற்கத்தக்கவாறு இருத்தல்.
- அவர்களுக்கு மரியாதை செலுத்தி ஆவசனத்தில் இருக்கச் செய்தல்.
- அவர்கள் விரும்பிய நூல்களை கொடுத்தல்.
- புதிய நூல்கள் வந்திருப்பின் அதைப்பற்றி வாசகர்களுக்கு கூற வேண்டும்.

03. 1. குழந்தைப்பருவத்தில் தொட்டில், நடைபழகும் பருவத்தில் நடைவண்டி, பள்ளிப்பருவத்தில் ஏடுகள், மணப்பருவத்தில் கட்டில், கிழப்பருவத்தில் ஊன்றுகோல், இறந்த பிறகு பாடை

2. தாகத்துக்கு பானம் தந்து, பசிக்கு உணவூட்டி, உடுத்த உடையாகி, வசிக்க வீடாகி, நோய்க்கு மருந்தாகி, பயணத்திற்கு சக்கரங்களாகி வேலைகளில் கைக்குள் கையாகி
சுவாசத்துக்கு காற்றை சலித்துக் கொடுத்து உதவுகிறது.

3. உயர்வு நவிற்சி அணி

4. மனிதனின் சுவாசத்திற்காக மரங்கள் காபனீரொக்சைட்டை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளிவிடுகின்றன.

5. அ. விருட்சம் ஆ. பிணி இ. ஆகாரம்
ஈ. பவனம் உ. கொண்டல்

பகுதி III

04. மருத்துவிச்சியின் பரந்த நோக்கு வெளிப்படுதல்.
உ.ம் : அயலும் புடையம் வாழ வேண்டும்.
அன்னமும் சுற்றமும் வாழ வேண்டும்

பிள்ளையின் உறவினர்கள் வாழவேண்டுமென வாழ்த்தும் மனப்பாங்கு
உ.ம் : கோச்சி வாழ, கொப்பர் வாழ

குழந்தையை தம்பி என உறவு முறை கொண்டு அழைத்தல்.
உ.ம் : உள்ளிப் பொதியோடும் வந்தீரோ தம்பி.



kalvi.lk

05. அ.
- தமிழ் மக்களுக்கென்றே புத்தகசாலை பல்கலைக்கழகம் போல் எங்கு இருத்தல் அவசியம்.
- தமிழ் அல்லாத பிறமொழிப்புத்தகங்கள் தமிழ் மொழியில் மொழிபெயர்த்தல்
- அமுதம் போல தூய்மையான தமிழில் கவிதைப் புத்தகங்கள் உரைநடை நூல்கள் என்பவற்றை துறை துறையாக பிரித்து வைத்தல்.

ஆ.
- தமிழர்க்கு என தமிழ் மொழியில் நூலகம் தேவை.
- பிறமொழி நூல்களை தமிழ்மொழியில் மொழிபெயர்ப்பு செய்தல்.
- வாசகர்களை வரவேற்று இருக்கச்செய்தல்.
- விரும்பும் நூல்களை வழங்குதல்.
- தினசரி பத்திரிகைகள் பேணப்பட்டு வாசிக்க வைத்தல்.
- கவிதை, உரை நடை நூல்கள் தொகையாக அமைதல்.

06. அ.
- மனிதனுக்கு வெயிலுக்கு நிழல் தரும்
- குழந்தைப்பருவத்தில் தொட்டிலாக, நடை பழகும் பருவத்தில் நடை வண்டியாக, பள்ளிப் பருவத்தில் ஏடுகளாக..... போன்ற காரணங்கள்.
- தாகத்துக்கு பானம் தந்து, பசிக்கு உணவூட்டி, உடுக்க உடை, வசிக்க வீடு, நோய்க்கு மருந்து, பயணத்துக்கு சக்கரங்களாகி, சுவாசத்துக்கு காற்றை சலித்துக் கொடுத்து..... போன்ற காரணங்கள்.

ஆ.
- கன்∴பூஸியஸ் மரணப்படுக்கையில் இருந்தபோது தனது சீடர்களுக்கு கூறிய செய்தி
  உ.ம் : பல வன்மை நாக்கு மென்மை வெப்பம் வன்மையானது ஒளி மென்மையானது.

- பூகம்பத்தில் மனிதன் கட்டும் வலிமையான வீடு விழுந்து விடுகிறது. மென்மையான சிலந்தியின் வீடு தப்பித்து விடுகிது.

- புயலினால் வலிமையான மரம் விழுந்துவிடும். மென்மையான நாணல் தப்பித்து விடுகிறது.
  இது போன்ற உதாரணங்கள்.

* * *

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page